**ஆங்கில மொழி தொடர்பான பட்டநிலை பின் படிப்பு நிறுவனம் - 2021**

---

## 1. நிதிக் கூற்றுகள்

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஆங்கில மொழி தொடர்பான பட்டநிலை பின் படிப்பு நிறுவனத்தின் 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரை மற்றும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 12 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தில் 107(5) உபபிரிவு மற்றும் 18 ஆவது உபபிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள 2005 ஆம் ஆண்டு 04 ஆம் இலக்க ஆங்கில மொழி தொடர்பான பட்டநிலை பின் படிப்பு நிறுவனக் கோவையில் 18 ஆவது பிரிவு பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துகள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் காண்பிக்கப்படுகிறது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, அதிகார சபையின் நிதிக் கூற்றுகளின் ஊடாக 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு

செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து அதிகார சபையின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது அதிகார சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.
- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,
- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பிலான கணக்காய்வு அவமானிப்பு

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஒழுங்கமையாமை

| உரிய தரத்தின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமங்கள் 03 இல் 07 ஆவது பந்தியின் ஏற்பாடு-களுக்கு ஒழுங்கமையாத வகை-யில் எதிர்காலத்தில் மேற்கொள்-வதற்கு | இந்த பணத் தொகை பிரித்தானியா கவுன்சில்மூலம் (டீசவைளை ஊழரஉெடை) கருத்திட்டம் பொருட்டு மேற்கொள்வதற்கு | இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்க-ளுக்கு ஒழுங்கமைவாக நடவடிக்கை மேற்கொ- |

| | |
|---|---|
| எதிர்பார்க்கின்ற பணிகளின் பொருட்டு 2019 ஆம் ஆண்டில் அட்டுறு செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்த ரூபா.524,850 தொகை 2021 திசெ-ம்பர் 31 ஆம் திகதி வரையும் காணப்பட்டது. | எதிர்பார்க்கின்ற செலவுக்காக ள்ளுதல் வேண்டும். தீர்க்கப்படுகிறது. |

**1.5.2 கணக்கீட்டு குறைப்பாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்கிடுவதில் ஏற்பட்ட குறை-ப்பாடுகள் காரணமாக மீளாய்-விற்கான ஆண்டுக்கு ஏற்புடை-யதாக திறைசேரி உண்டியல்-களின் வட்டி வருமானம் ரூபா.284,016 ஆல் அதிகமாக நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்-பட்டிருந்தது. | திறைசேரி உண்டியல்கள் இரண்டினது, வட்டி வருமானத்தில் கூட்டுமொத்தம் கணக்கு வைத்தல் தொடர்பானதால், அந்த குறைப்பாடுகளை செவ்வையாக்-குவதன் மூலம் இந்த குறைப்பாடு இயல்பாகவே செவ்வையாகும். | திறைசேரி உண்டி-யல் வட்டி வருமா-னம் செவ்வையாக கணக்கிடப்பட்டு கணக்கு வைப்பத-ற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக முதலீட்டு வட்டி வருமானக் கணக்கின் குறைப்-பாடுகள் காரணமாக முதலீட்டு கணக்கு ரூபா.243,768 ஆலும், முதலீட்டு வட்டி வருமானக் கணக்கு ரூபா.385,776 ஆலும், கிடைக்கப்பெற வேண்டிய முத-லீட்டு வட்டி கணக்கு ரூபா. 142,008 ஆலும் அதிகமாக நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்ப-ட்டிருந்தது. | இந்த திறைசேரி உண்டியலில் செவ்வையல்லாது கணக்கு வை-க்கப்பட்டுள்ள வட்டி வருமானம் எதிர்வரும் ஆண்டில் கணக்-குகளை தயாரிக்கையில் செவ்-வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | திறைசேரி உண்டி-யல் வட்டி வருமா-னம் செவ்வையாக கணக்கிடப்பட்டு கணக்கு வைப்ப-தற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | 2019 ஆண்டுக்கு ஏற்புடையதாக மொத்தம் ரூபா.168,000 ஆன கிடைக்கப்பெற வேண்டிய வரு-மானம் முறையான அனுமதி-யின்றி மீளாய்விற்கான ஆண்டில் பதிவழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கணக்குகளின் ஊடாக பெறு-மதிகளை பதிவழிக்கும் போது உரிய அனுமதியுடன் மேற்கொ-ள்வதற்கு எதிர்காலத்தில் நடவடி-க்கை எடுக்கப்படும். | பதிவழிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட கிடைக்கப்பெற வேண்டிய வருமா-னம் தொடர்பான பெறுமதி சம்பந்தப்-பட்ட தரப்புகளிட-மிருந்து முன்னங்கீ-காரம் பெற்றுக்-கொண்டதன் பின்-னர் மட்டும் கணக்-குகளிலிருந்து பதி-வழிப்பதற்கு நடவடி-க்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்விற்கான ஆண்டில் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக பணக் கொடுப்பனவு ரூபா.586,500 ஆயினும், காசுப் பாய்ச்சல் கூற்றின் அந்தப் பெறுமதி ரூபா.2,839,446 என்று காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டின் நிதிக் கூற்றுகளுடன் செவ்வையாக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றும் சமர்ப்பிக்கப்படும். | காசுப் பாய்ச்சல் கூற்று செவ்வையாக தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (உ) | மீளாய்விற்கான ஆண்டில் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்வதற்காக செலுத்தப்பட்ட தொகை ரூபா.55,157,902 ஆயினும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அந்தப் பெறுமதி ரூபா.56,431,800 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றில் நிலவிய குறைப்பாடுகளை செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | காசுப் பாய்ச்சல் கூற்று செவ்வையாக தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்விற்கான ஆண்டில் பணத்தால் கிடைக்கப்பெற்ற முதலீட்டு வட்டி வருமானம் ரூபா.2,901,200 ஆயினும், காசுப் பாய்ச்சல் கூற்றில் அந்தப் பெறுமதி ரூபா.4,566,984 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வால் கணக்கிடப்பட்ட முதலீட்டு வட்டி வருமானத்தின் பாய்ச்சல் செவ்வையல்ல எனவும், மீள்கணிப்பீட்டின் போது காண்பிக்கப்பட்டிருந்தது. | காசுப் பாய்ச்சல் கூற்று செவ்வையாக தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 1.6 கிடைக்கப்பெறுவனவைகளும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகளும்

### 1.6.1 கிடைக்கப்பெறுவனவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் கிடைக்கப்பெற வேண்டிய மாணவர் கட்டண வருமானம் ரூபா.1,412,250 ஆனதுடன், அதில் ரூபா.577,750 03 ஆண்டுகளிலும் பார்க்க பழைமையான மீதிகளாகும். | இந்த அண்டு தொடக்கம் கற்கைநெறி கட்டணங்கள் தாமதப்படுத்தும் மாணவர்களுக்கு சில நினைவூட்டல்களை அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேலதிக செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான ஆற்றல் தொடர்பாக முகாமைத்துவ சபையுடன் கலந்துரையாடுவதற்கு குறித்தக்கொள்ளப்பட்டது. | அந்தந்த ஆண்டில் கிடைக்கப்பெற வேண்டியதாக அடையாளம் காணப்பட்ட மீதிகளை காலரீதியாக அறவிடுவதற்கு முறைமைகளை தாபித்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை**

| சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர் | | ஒழுங்கமையாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/ 12 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 பிரிவு | நிதி விடய பொறுப்பு அமைச்சரது முன்அனுமதி பெற்றுக்கொள்ளாது நிறுவனத்தால் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா. 94,431,800 ஐ முதலீடு செய்யப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை | சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டுள்ள நிலையான சொத்துக்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியுமான வகையில் நிலையான சொத்துக்களின் பதிவேடு தயாரித்து பராமரிக்கப்படவில்லை. | நிறுவனத்திற்கான நிலையான சொத்துக்களை, நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கும்போது வழங்கியுள்ள பெயர்கள் மற்றும் பொருட் மீளாய்வில் உள்ளடக்கப்பட்டுள்ள பெயர்களுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு இருப்பின், அந்த குறைப்பாடுகளை செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல். | சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைபயன்

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைபயனில் ரூபா.21,528,776 ஆன மிகை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் மிகை ரூபா.7,766,962 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயனில் ரூபா.13,761,814 ஆன வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு கற்கைநெறி கட்டணங்கள் ரூபா.11,659,337 ஆல் அதிகரித்தலும், அரசாங்கத்தின் மீண்டுவரும் அளிப்புகள் ரூபா.3,550,000 ஆல் அதிகரித்தலும் பிரதான காரணங்களாகின.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதியத்தின் குறை பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் அபிவிருத்தி நிதியத்தில் நிலவிய (PGIE Development Fund) ரூபா.3,967,500 ஆன மீதி 06 ஆண்டுகளிலான காலம் தொடக்கம் சம்பந்தப்பட்ட நோக்கங்-களின் பொருட்டு பயன்ப-டுத்துவதற்கு நடவடி-க்கை மேற்கொள்ளப்பட-வில்லை. | கணக்காய்வு குழுவின் பரிந்துரைகள் மற்றும் முகாமைத்துவ சபையின் அனுமதிக்கமைவாக இந்த பணத் தொகை நிறுவனம் பொருட்டு உருவாக்கப்படும் முகாமைத்துவ தகவல் முறைமையில் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | நிதியம் தாபிக்கப்பட்டுள்ள நோக்கங்களின் பொருட்டு பயன்படுத்தல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தாபனத்திற்கு தேவையான புத்த-கங்களை கொள்வனவு செய்-கையில் பெறுகை திட்டம் பின்பற்றுதல் திறந்த பல்கலைக்க-ழகத்தால் மேற்கொண்டிருந்த-துடன், செலவினம்-ரூபா.2,522,578 ஆன புத்தகங்கள் மற்றும் வார சஞ்சிகைகள் திறந்த பல்கலை-க்கழகத்தின் நூலகத்தில் பராம-ரிக்கப்படுகிறது. அவ்வாறே அந்த புத்தகங்கள் தொடர்பான தகவ-ல்கள் நிறுவனத்தின் பதிவேட்டில் குறிப்பு வைப்பதற்கும் நடவடி-க்கை மேற்கொள்ளவில்லை. | பட்டநிலை பின்படிப்பு ஆங்கில மொழி நிறுவனத்தின் கோவை-யின்படி, இலங்கை திறந்த பல்கலைக்கழகத்துடன் இணை-க்கப்பட்டுள்ளதுடன், அதனை பராமரிப்பதற்காக திறந்த பல்-கலைக்கழகம்மூலம் வசதிகள் அளிக்க வேண்டியிருந்தது. அதன்படி 2007/2008 ஆண்டு-களில் திறந்த பல்கலை-க்கழகத்தின் நூலக குழுவால், பட்டநிலை பின் படிப்பு நிறுவனத்திற்குரிய நூலகப் புத்தகங்களை, திறந்த பல்-கலைக்கழகத்தின் நூலகத்தில் பராமரிப்பதற்கு வசதிகளை வழங்குவதற்காக தீர்மானிக்கப்-பட்டுள்ளது. நிறுவனத்தால் நூலகப் புத்தகங்களின் பொரு-ட்டு பிரிதொரு ஆவணம் பராமரிக்கப்படுவதுடன், நூலகப் புத்தகங்களின் பொருட்டு பிரிதாக நிலையான சொத்து-க்களின் பதிவேட்டில் உள்ளட-க்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. | நிறுவனத்திற்கான சொத்துக்களின் உரிமை மற்றும் இருப்புநிலை நன்கு உறுதிப்படுத்து-வதற்கு முறையான முறைமை தயாரித்தல் வேண்டும். |
| (ஆ) | திறைசேரியின் அனுமதி பெற்றுக-கொள்ளாது, நிறுவன்ததால் அங்கீகரிக்கப்பட்ட பணியாற்றொ-குதியில் இல்லாத பதவிகளின் | இரண்டு கற்கை ஒருங்கிணைப்பு (Academic Coordinator) பதவிகளின் பொருட்டு முகா-மைத்துவ சபையின் அனுமதி- | திறைசேரி அனுமதி பெற்றுக்கொண்-டதன் பின்னர் தேவையான |

| | | |
|---|---|---|
| பொருட்டு ஒப்பந்த அடிப்படையில் கற்கை அலுவலர்கள் மற்றும் கருத்திட்ட அலுவலர்கள் இரண்டு பேர் என்ற வகையில் ஆட்சேர்ப்புச் செய்து மீளாய்விற்கான ஆண்டில் ரூபா.1,495,000 ஆன கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்த அடிப்படையின்மீது ஆட்சேர்ப்புச் செய்த இரண்டு விரிவுரையாளர்களிடம் ரூபா.1,452,005 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | யுடன் உரிய நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் பல்கலைக்கழககங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிடம் புதிய பதவியணி பதவிகளை உருவாக்குதல் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபங்களின் ஆலோசனைகளின் படி, தற்போதுள்ள புதிய ஆட்சேர்ப்புகள் தொடர்பான நியாயப்படுத்தலுடன் குறித்த வேண்டுகோளை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் இந்த நிறுவனத்தின் ஒதுக்கீடுகளைக் கொண்டு சம்பளம் செலுத்தும் நிபந்தனைக்கமைவாக இரண்டு ஆசிரியர் பதவிகளும் இரண்டு முகாமைத்துவ உதவியாளர் பதவிகளையும் அங்கீகரித்துள்ளது. அதற்கு இணையாக இரண்டு கருத்திட்ட உதவியாளர் பதவிகள் பொருட்டு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளது. | ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 4. கணக்கீட்டு நடவடிக்கைகளும் நள்ளாளுகையும்

### 4.1 நிலையான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| நிலையான அபிவிருத்தி நோக்க-ங்களை அடைந்துக்கொள்ளும் பொருட்டு நிறுவனத்தால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய இலக்குகள் மற்றும் குறித்த இலக்குகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக தற்போ-துள்ள பற்றாக்குறைகள் மற்றும் முன்னேற்றம் அளவிடுவதற்காக பொருத்தமான சுட்டிகளை அடையா-எம் காணல் வேண்டுமாயினும், நிறுவனத்தால் அவ்வாறான சுட்டி-களை அடையாளம் காணப்பட்டு, நோக்கங்களை அடைந்துக்கொண்ட அளவு, அடையாத அளவு மற்றும் கவனம் செலுத்தப்பட வேண்டிய துறைகள் என்பன அடையாளம் காணப்படவில்லை. | இந்த விடயம் தொடர்பாக இந்த நிறுவனத்திற்கு ஏற்புடையதான வகையில் கற்கையிட்டதன் பின்னர் அது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. | செயலாற்றுகை சுட்டிகள் (KPI) அளவிட முடியுமான வகையில் தயாரித்து, முன்னேற்றம் மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |